1973 நவம்பர் 23]

சேர்த்துக்கொள்வதா வேறு வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொள் கொள்வதா என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் நிதி வசதி இல்லாததே அதற்குக் காரணம்.

திரு. நா. வெ. குருசாமி: மதுரை கோட்டப் பொறியாளர் அவர்கள் 28—8—1971 அன்று சுமார் 7,50,000 ரூபாய் இந்த வேலைத் திட்டத்திற்கு செலவாகும் என்று மதிப்பிட்டுள்ளார்கள். அந்த மதிப்பீட்டை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கெனவே மருதப் பட்டி-வாடிப்பட்டித் திட்டத்திற்கு 5 லட்சம் ரூபாயும், அதைப் போலவே குள்ளபுரம்-மருதப்பட்டித் திட்டத்திற்கு 3 லட்சம் ரூபாயும் ஆகுமென்று தனித்தனியாக பட்டியல் வெளியிடப்பட் டிருக்கிறது. அதையும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறை வேற்ற நிதி வசதி இல்லாததால் வேறு வேலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாமா என்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலம்

*** 352 வினா—திரு. அ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் வட்டம், கருவேலன்கடை கிராமத்திற்கருகில் வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலமொன்று கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: கருவேலங்கடை, வடக்கு பொய்கைநல்லூர் கிராம மக்களிடமிருந்து வந்த கோரிக் கையின் பேரில், நாகப்பட்டினம் தாலுகாவில் கருவேலங்கடை கிராமத்திற்கு அருகில் வேதாரண்யம் கால்வாயின்மேல் பாலம் கட்டுவது பற்றி தலைமைப் பொறியரின் ஆலோசனையை அறிந்து அரசாங்கத்தால் ஆராயப்பட்டது. இந்தப் பால வேலைக்கு சுமார் 1.25 இலட்சம் செலவாகும் என்று கூறப்பட்டது. அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தப் பால வேலையை வளமான காலம் வரும்வரை தள்ளிப் போடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.